


JPL
C13267

# னாக் கவிதைகள்

தொகுப்பாசிரியர்கள்
க.பரணீதரன்
இ.சு.முரளிதரன்
தி.செல்வமனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

இலங்கையில் முதன்முதலாக
வெளிவரும்

# கொரோனாக் கவிதைகள்

பொது சன நூலகம்
08 JUL 2020
யாழ்ப்பாணம்

தொகுப்பாசிரியர்கள்
க.பரணீதரன்
இ.சு.முரளிதரன்
தி.செல்வமனோகரன்
அ.பௌநந்தி

132267 CC
277929
277929 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.811

**கொரோனா கவிதைத் தொகுப்பு**

தொகுப்பாசிரியர்கள்:
க.பரணீதரன்
இ.சு.முரளிதரன்
தி. செல்வமனோகரன்
அ.பௌநந்தி

முதற் பதிப்பு : 2020 ஆனி
வெளியீடு : ஜீவநதி, கலைஅகம், அல்வாய்.
பதிப்புரிமை : க.பரணீதரன்
நூல் வடிவமைப்பு : க.பரணீதரன்
அச்சு : பரணீ அச்சகம், நெல்லியடி
பக்கம் : 40
விலை : 150/-
ISBN : *978-955-0958-46-7*

ஜீவநதி வெளியீடு - 155



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்புரை

அதியுயிர்காவு தீநுண் கிருமியொன்றின் பரவுகையால் அகிலமே முடக்கத்திற்குள்ளாகி விட்டது. வல்லரசு தேசங்களும் நுண் நனோ அளவுடைய பொது எதிரியைக் கண்டு பயந்து அழிவுக்குள்ளானதே நிதர்சனமாகிப் போனது. மனித உடலிலே நுழைந்து, கலச்சுவர் திறக்கும் "சீசேம்" மந்திரம் அறிந்த RNA, கலங்களின் கட்டளை அதிகாரியாகி கோடிக்கணக்கான பிரதிகளைக் குறுகிய நேரத்திலே உண்டாக்கி மருத்துவத்துறைக்கே சவாலாகியுள்ளது. "கொரோனா" என்று பொது நாமத்தால் சுட்டினும் Serotype வகையின் OC43, NL63, 229E, HKU1 என்பவற்றோடு இயைபு வாழ்வினைத் தொடர்ந்தவர்கள் நாம்! Covid 19, SARS, MERS என்பனவே மனித குல விரோதிகள்! Covid 19 என்ற தீநுண் கிருமியினையே இத்தொகுப்பு "கொரோனா" என்று அடையாளப்படுத்துகின்றது.

மீமுதலாளிகளின் பெருந்திருட்டே பின்புலம் என்ற ஐயத்தோடு அணுகப்பட்ட நிலையில் தற்போது இயற்கையின் அவதாரமென்றே அறிவியலாளர்கள் அறிக்கையிடுகிறார்கள். நதிமூலம் பிடிபடவில்லை! சுய தூய்மை, முகமூடி வாழ்வு, தொடர் முடக்கம், இறுதிக் கிரியை ரத்து மரணங்கள், தனிமைப்படுத்தல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார வீழ்ச்சி, வறுமை, சமமற்ற கல்வி வாய்ப்பு போன்ற பன்முகப்பட்ட திணிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. மருத்துவத் துறையினர், தூய்மைப் பணியார்கள், காவலர்கள் என்போர் மீதான கௌரவமும் உயர்ந்துள்ளது. "இயற்கை முன் எல்லோரும் சமம்", "தக்கன பிழைக்கும்", "அறிவியலே இறை" போன்ற தொடர்களின் அர்த்தங்களும் விரிவுபட்டுள்ளன. அலட்சியமும், முன்னேற் பாடின்மையும் ஆபத்தின் அடித்தளமாக மாறியுள்ளன. இத்தகைய சூழ்நிலைகளை கவிதையிலே பதிவு செய்ய வேண்டுமென்ற வேணவாவின் வெளிப்பாடாகவே "கொரோனா கவிதைப் போட்டி" ஜீவநதி சஞ்சிகையால் முன்னெடுக்கப்பட்டது.

91 போட்டியாளர்கள் பங்குபற்றிய போதும், தட்டையான மொழியிலமைந்த வெளிப்படை நிகழ்வுப் பதிவுகளாகவே அதிக கவிதைகள் காணப்பட்டன. உளத்திருப்தி தரக்கூடிய வகையிலே அமைந்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்து "கொரோனாக் கவிதைகள்" என்ற தொகுப்பாக்கியுள்ளோம். கவிமனம் கொண்ட படைப்பாளிகள் அதிகளவிலே பங்குபற்றியிருந்தால், கனதியான அளவில் இத்தொகுப்பு பிரசவித்திருக்கும். ஆனாலும் எங்கள் பெருவிருப்பொன்றின் குறிகாட்டியாய் இத்தொகுப்பு வருவதையிட்டு மகிழ்வடைகின்றோம். இலங்கையிலிருந்து முதன்முதலாக வெளிவரும் "கொரோனாக் கவிதை" தொகுப்பு என்பதையிட்டும் பெருமை கொள்கின்றோம்.

தொகுப்பாசிரியர்கள் சார்பில்
இ.சு.முரளிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாபம்

ஒரு பூச்சியின் முகத்திலும்
மலர்ச்சி இல்லை
இதழ்கள் முகிழ புன்னகை சொரிந்து
வெகு நாட்களாகி விட்டன
வெற்றுடல்கள் புதைக்கப்பட்ட
சவக் காலையென
வெறிச்சோடிக் கிடக்கிறது அண்டம்
கடவுளால் ஏவி விடப்பட்ட
அருவமான கொலைகாரப் பறவையொன்று
பெரு வெளியெங்கும் தீராத் தாகத்தோடு
அலைந்து திரிந்து அயர்ச்சியுறாது
உலகினைத் துரத்தித் துரத்தி மிரட்டுகிறது
அதன் தொடர்ச்சியான அச்சுறுத்தலினால்
பிரசித்தமான நகரங்கள்
ஒவ்வொன்றாகப் பூட்டப்பட்டு வருகின்றன
தனிமைப் படுத்தலென்பது
இங்கு தினமும் வலிந்து நடக்கிறது
அதுவே வாழ்வாகியும் விட்டது
ஒருத்தரையொருத்தர் சந்தித்து
வார்த்தைகள் பகிர அஞ்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி ஒளிந்தோடுகின்றனர் மாந்தர்கள்
நாம் ஆதியிலிருந்து ஆச்சர்யப்பட்டு
வியந்து ரசித்த உலகானது
ஒரு அறைக்குள் அடங்கிவிட்டது
கடைசிச் சொட்டு உயிரிலும்
எதற்காக சாகிறோமென்று தெரியாமல்
உயிரை மாய்த்தவர்களினது சாபம்
யாரைக் குறி வைத்து சாடியிருக்குமோ?

- ஜமீல்
(மருதமுனை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படிக்கு உங்களால் நான்

அன்புடன் மனித ஜாதிக்கு
மீட்டெடுக்க முடியாத சில
உண்மைகளுடன் - சில
நடத்தைகளின் வலிகளுடன்
கடவுளின் மொழியாக உங்கள் முன் நான்

நரைத்த பூமியையும்
தொலைத்த மானிடத்தினையும்
மீட்டெடுக்க வந்த எச்சரிக்கை ஒப்பந்தம் - நான்

நியூட்டனின் 3 ம் விதியை
மனித முக மூடிகளுக்கு புரிதல் செய்யவும்
மனித தப்பிதங்களால், புனிதங்களை
எரித்த சாதி, மத, பதவி, போதை அதிகாரக்
கறுப்பு நெருப்பினை எரிக்க வந்த சூரியன் - நான்

மனிதப் பச்சோந்திகள் சில
உன்னதங்களை மறந்ததால்
ஞாபக மொழியாக வந்தவன் - நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகப் போர்வையில் பண்பாட்டைத்
தொலைத்து பாவ விதைகளைத் தூவிய
முடைநாற்றப் பேய்களின்
அறுவடையாக வந்தவன் - நான்

பழைமையை விற்று புதிய பிணங்களை
வாங்கி வாழ்க்கை நடத்திய
பேதை மனிதனின் பரிதாபக் குறியீடு நான்

ஆச்சாரங்களை மறந்து, நியமங்களை
துறந்து துய்மை பாழடித்த
துஷ்ட மனிதரின் காணிக்கைப் பூ - நான்

இன்னுமா புரியவில்லை?
நான் யார் என்று
மனித உயிர்களை எடுத்த குற்றச்சாட்டுடன்
இப்படிக்கு உங்களால் - நான் (கொரோனா)

- மீரா சிவகாமி
(கரவெட்டி, யாழ்ப்பாணம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்கேட்டுச் சுந்தரமாய் வாழ்

சீனாவிற் தோன்றி சிலமாத மாகுமுன்பே
பூநாக மாகியெங்கும் போய்த்தனது - காணாத
வீரியத்தைக் காட்டி விளையாடி நிற்குமிந்த
கூரிய நோயினைப் பார்.

வந்திங்கே வாட்டி வதக்கியே எங்களின்
சொந்தங்கள் சோர சுகமழித்து - எந்தவிதச்
சந்தடியும் இன்றிச் சிரங்காட் டிடாதுமே
குந்திடச் செய்திட்டாய் நீ.

அரிசியும் மாவும் அரியமீன் ரின்னும்
பருப்பும் பகிர்ந்து படைக்க - உரிய
விருப்புடன் வந்து விருந்தாய் தருவோர்,
நெருப்பாய் எடுப்பார் படம்.

திக்கொன்றாய் சொந்தங்கள் தீராத இன்னலிலே
தக்கவாழ் வின்றித் தவித்துமே - சிக்கலில்
துக்கிடும் வேளையில் தூயவாழ் வொன்றிட
இக்கணம் காக்கும் இறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரடங்கு வேளையிலும் ஓய்வின்றி எங்குமே
நீரடங்கா மாதிரியாய் நித்தியமும் - தீரமுடன்
ஆரடக்கு வாரென்னை என்றுலாத்தும் நண்பனே,
பாரடங்கிப் போவதைநீ பார்.

தொற்றுறுதி என்றிட்டால் தூரவைக்கும் காலமிது
பற்றுறுதி கொண்டவரும் பாரமென்று - தூற்றியே
நிர்க்கதியாய் விட்டிடுவார்; நித்திலத்தின் கோலமிது
சொற்கேட்டுச் சுந்தரமாய் வாழ்.

என்றிந்தத் தொல்லையது இங்கொழியும் என்றுமே
இன்றி டரிலுள்ள எல்லோர்க்கும் - ஒன்றுரைப்பேன்,
வென்றாவேன் வீறுடனே என்றுலவும் நோயதனைக்
கொன்றுய்ய நாமெழுவோம் வா.

- பொலிகை சு.க.சிந்துதாசன்
(பொலிகண்டி, யாழ்ப்பாணம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாவும் கொடுமைகளும்

இழுத்துச் சாத்தப்பட்டிருந்த பள்ளியின் வகுப்பறைகளில்
மாணவ மாணவிகளின் மர இருக்கைகளிலிருந்து
கேவல் ஒலிகள் இராக்காலங்களில்
கேட்கத்துவங்கியிருந்ததை
யாரும் கேட்டறிந்திருக்கவில்லை!

நகரின் ஒதுக்குப்புறத்திலிருந்த பள்ளியினுள்
உயர்ந்து வளர்ந்து நின்றிருந்த மரங்களிலிருந்து
தூரதேசத்திலிருந்து வந்திருந்த பறவைகளின்
கீச்சொலிகளை பகலில் கேட்டோர் யாருமில்லை.

அத்தியாவசிய தேவைகளான காய்கறிகளை வாங்கச் செல்வோர்
பைப்பபடிபட்டிருந்த வீங்கிப்போன பிருஷ்டங்களைத் தடவியபடி
தாங்கள் இருசக்கர வாகனங்களில் பூட்டிடப்பட்டிருந்த பள்ளியின்
இரும்புக் கதவினை பார்த்தும் பாராமல் கடந்து செல்கின்றனர்.

தனி மனித இடைவெளியின் அவசியம் பற்றி
அறிவுறுத்தியபடி செல்லும் மூன்றுசக்கர வாகனத்தின்
கொடை ரேடியோவின் ஒலியை புதிதாய்க் கேட்டபடியும்,
நகரின் ஆலைகளிலிருந்து புகைபோக்கி குழாய் வழியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் நச்சுப்புகையை சுவாசிக்காமலும்
அந்தப் பள்ளி அங்கேயே தான் வெறுமையோடு
நின்றிருக்கிறது
தன் பழைய கால சந்தோசங்களை அசை போட்டபடி!

மூடப்பட்டிருந்த பள்ளியின் வெறுமையை..
மூடப்பட்டிருக்கும் வகுப்பறைகளின் வெறுமையை..
இந்த விரலகளைக் கொண்டு
எழுதித் தீர்த்து நிரப்பவும் முடியவில்லை.

2.
வாட்சப் வதந்திகளை நம்பாதீர் என்றனர்.
செய்திச் சேனல் வதந்திகளையும் சேர்த்து
எனச் சொல்ல மறந்தனரோ?

3.
யாரும் பத்திரமாய் வீடு
திரும்பவேண்டிய அவசியமில்லை.
எல்லோரும் வீட்டினுள் தான் இருக்கிறோம்.

- வெ.அருட்குமரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளை நோயும் கோர விளைவும்

கொள்ளை நோயும் கோரச் சாவும்
கொரோனா என்று உலகை அழித்தது
நுண்ணிய துகளாய் கண்ணில் மறைந்து
நுழையும் உடலில் கிருமித் தொற்றாய்

சுத்தம் மறந்து சுற்றம் சேர்த்தால்
சுயமாய் வாழ தனிமை கொள்வாய்
கொத்தாக உயிர்கள் அண்டம் எங்கிலும்
கொலைக்களம் புகுதே அழிவின் அவலம்

நாடுகள் அடங்கி வீட்டுக்குள் முடங்கி
நாளைய தினத்தை விடிவாய் நினைத்தோம்
தூய்மை வழிகளைத் துணையாய்க் கொண்டு
துயரம் விரட்ட எழுவோம் ஒன்றாய்

வலிய அரசுகள் பதறித் துடிக்க
வருவாய் இழந்து பொருளியல் மூழ்கும்
மாற்றம் காணும் எங்கள் தரணி
மானுடம் வாழ வீட்டில் உறைந்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக அழிவின் அரக்கப் போரை
உன்னத மருத்துவத் துறையும் வென்றது
உழைப்பால் உலகை உயர்த்திட்டோம் போதும்
உறவுகள் இணைந்து கொடியனை
துரத்துவோம்...

- தெட்சணாமூர்த்தி கரிதரன்
(திருகோணமலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபரம் விடை காணா வினாக்கள்

உகானில் உருவெடுத்த அணு வெடியா - நீ
உயிர்களைக் காவு கொள்ளும் பெரு வெடியா!

பார்வைக்கு எட்டாத மென் பொருளா - நீ
பார்த்திருக்க உயிர் பறிக்கும் வன் பொருளா!

மண்ணுக்குள் உதித்த உயிர்த் தொற்றா - நீ
மனிதன் வடிவமைத்த வைரஸ் தொற்றா!

உயிரியல் ஆயுதப் போரொன்றின் ஒத்திகையா - நீ
உலகை அழிக்க எடுத்த குத்தகையா!

உயிர்கொல்லி நுண்ணுயிர்களின் உடன் பிறப்பா - நீ
உகான் ஆய்வுகூடத்து கையிருப்பா!

கண்ணுக்குத் தெரியாத எதிரியா -நீ
கண்ணுக்குள் புகுந்து தாக்கும் வைரியா!

தீண்டாமை தான் உன் பூர்வீகமா - உன்னை
தீண்டியோரை அழிப்பதென்ன தார்மீகமா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை யெத்தனை சந்தேகம் நெஞ்சிக்குள்ளே - நீ
எங்கிருந்து வந்தாய் இந்த மண்ணுக்குள்ளே!

வடிவத்தில் நீயொரு மலர் வளையம் - நீ
வந்திறங்கிய இடமெலாம் நமக்கு தடை வலயம்!

அணுகுண்டு வெடித்தால் பரவும் கதிர்வீச்சு - நீ
ஆக்கிரமித்தால் அடங்கும் மனித உயிர் மூச்சு!

அனுதினமும் உனைப்பற்றியே ஊரெங்கும் பேச்சு -நீ
அழிந்தாலன்றோ நமக்கு நிம்மதிப் பெருமூச்சு!

வேண்டாமை, தீண்டாமை விதிதனை யேற்றி
விரட்டியடிப்போம் புவிதனில் கொரோனாவை!

- கரு. இராஜமாணிக்கம்
(நாரங்கம்மன, அரநாயக்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL
277929

## மனிதக்காட்சிசாலை

ஓ... இது மனிதக்காட்சிசாலை
இரும்புச்சிறைகளுக்கு பின்னால் கம்பிகளை
இறுகப்பற்றியிருந்தன அவர்கள் கைகள்...
சிக்குண்ட மானுடம் பார்த்து
ஆரவாரித்தன விலங்குகள்

அறைகளில் ஓரமாய் ஒரு தட்டு
சொற்கேளாவிட்டால் விழும் ஒரு குட்டு
விதவிதமாய் முக கவசங்களோடு- அங்கே
நிறைந்து கிடந்தார்கள் மனிதர்கள்

சவர்க்காரத்தில் கைகழுவி காட்டினான் ஒருவன்
கை குலுக்காமல் வணக்கம் சொன்னான் ஒருவன்
தும்மலை முழங்கைக்குள் சிறைபிடித்தான் ஒருவன்
"தனித்திரு விழித்திரு" பேசினான் ஒருவன்

மஞ்சள் நீர் தெளித்து கோலமிட்டாள் ஒருத்தி
வேப்பிலைக் கொத்தை தொங்கவிட்டாள் ஒருத்தி
பச்சைக்காய்கறியும் பழவகையும் சேர்த்தாள் ஒருத்தி
உணவுவிடுதிகளுக்கு உலை வைத்தாள் ஒருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பாத்தை வெளியே உலர்த்தி உள்நுழைந்தான் ஒருவன்
சத்தான உணவின் ரகசியம் சொன்னான் ஒருவன்
விஷக்கிருமிகளை எதிர்ப்பதே வீரமென்றான் ஒருவன்
இடைவெளியோடு இருக்கையில் அமர்ந்தான் ஒருவன்

அநாவசியப் பயணம் ஆபத்தென்றாள் ஒருத்தி
அடுத்தவர்க்கு விழிகளை மட்டும் காட்டு என்றாள் ஒருத்தி
கொரோனாவின் கொட்டம் அடக்க
படை திரட்டென்றாள் ஒருத்தி
போர்த்திய பிணங்களோடு போராடுவதே வாழ்க்கை
என்றாள் ஒருத்தி

விலங்குகள் சிரித்தன...ஆர்ப்பரித்தன...கை தட்டின...
கமராக்களில் புகைப்படங்களாய் சேமித்தன
மனப்புகையோடும் வீண்பகையோடும்
போராடிய மனிதன்... இனி?????

- திருமதி. ஹ. பிரசாந்தன்
(மட்டக்களப்பு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருமுன் விழி!

கோழி பிடிக்க வந்த மரநாயாய்
கொரோனா முதுசங்களை கொள்ளையிடுகிறது
ஊர்வலமும் இல்லை ஒப்பாரியும் இல்லை
உறவுகள் அற்ற விடைபெறலில் சாம்பலாகின
மனித உணர்வுகள் - நாளும்
அடைகாத்து வளர்த்தவரை அந்தரத்தில் அனுப்பிவிட்டு
நினைவுகளில் பதுக்கி வைத்ததை மீட்டும் துயர்

ஒற்றைக்கல உயிரியை
ஆறறிவே உலகெலாம் காவிற்று
உலகடங்கி ஊரடங்கி உயிரடங்கிப் போகிறது
உலை வைக்க முடியாமல் ஏழை மனம் உளைகிறது
சமூக விலகல் தோல்வியுற தனிமைப்படல் நீள்கிறது
நீயா? நானா? காவி
அழையாவிருந்தாளியாய் யாருடனும் வரக்கூடும்
ஆறறிவினை மீற்றர் இடைவெளியில் நகர்த்தி
ஒளிந்திருக்கிறது நுண்ணாங்கி
பர்தாவை தடுத்தவர் முகக்கவசத்துடன் பதுங்க
கைரேகை காணாமல் போகிறது சவர்க்கார நுரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவங்களை முகமூடியினால் மூடி
பார்வைக்கு மட்டும் சமத்துவமாகும் போல மனிதர்

மல்லி வேர்க்கொம்பு தவிர்த்து
மஞ்சளும் வேப்பிலையும் மறந்து
விஞ்ஞானம் வளர விண்ணை தொட்டவன்
கண்ணை மறைத்தது எது? அதிகாரப்போட்டியா?
உலகமயமாக்கலின் இலவசவரவு
விழாக்களுக்கு இல்லை செலவு
மேம்படுகிறது சுற்றுச் சூழல்
போதும் எழு!
உற்பத்தி பெருக்கு! உழவுதனைச் செதுக்கு!
வருமுன் விழி இல்லாதவனுக்கு உதவு.

- சு.ராஜசெல்வி
(கிளிநொச்சி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்கொலை

முற்றுகை செய்யாத
மூன்றாம் உலகயுத்தமாம்
சக்கர வியூகத்தின் மத்தியில்
தத்தளிக்கிறது மனிதம்
எனது தாய் தமயந்தியானதால்
பொருள்வயிற் பிரிந்து
புலம்பெயர்ந்தாள்
அன்னையரே ஒருசொல் கேளீர்!
பிள்ளைகளைப் பிரியாதீர்!
கங்காருவாகக் காவுங்கள்!!
கண்டங்களைத் தாவுங்கள!!!
உடற்சூடு உணர்ச்சிதரும்
தனிமையுடன் தர்மயுத்தம்செய்து
அடிக்கடி தோற்கிறேன் அர்ச்சுனனாய்
கீதைசொல்ல யாருமில்லை
ஊரடங்கு உத்தரவு மீறலுக்குக்
காவற்படை காற்பந்தாக்கியது
மேவும்பசியோடு ஆவிகலங்கியது
அடிதழும்பை வருடுகிறேன்
அம்மாவின் கைவிரலாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெத்தென்று அணைக்கிறது
நடுஇரவில் ஆசைக்கனலெழுந்து
தொண்டைவெளியில் நர்த்தனங்களாட
தாய்மடியைத் தேடுகிறேன்
தலைசாய்த்துக் கிடப்பதற்கு
உலகப்பூட்டை உடைப்பதற்கு
பதிகங்கள் பாடிப்பயனில்லை
அதனால் மரண விண்ணப்பத்தை
மறுபரிசீலனை செய்கிறேன்
மன்னித்துவிடு தாயே

- ராணி சீதரன்
(தெகிவளை,கொழும்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாத் தவம்

சினிமா புதினங்களுடன்
மரணம் நேரலையில்...
உலகவலம் வரத்தக்கபடி
நம்ப முடியாததை நம்பும்படி
ஒரு பிரமாண்டமான
சுவரை வரைந்து விட்டது காலம்

அடையாளத்திற்காய்
முகங்களின் சாயல்களுக்கேற்ப
சாயங்கள் பூசிக்கொண்ட மனிதர்கள்
தனிமைப்படல் என்ற தகமையடைய
அவரவர்களுக்கான அறைகளையும்
தேர்ந்தெடுத்தும் சுயமாகப்
பிரித்தும் கொண்டார்கள்

கிரீடமாய் தலையில் வைத்திருந்த
கர்வம்,போலிப் படாடோபம்
இருப்பு,கொடுக்கல்,வாங்கலெல்லாம்
வாரறுந்த செருப்புபோல் வெளியே கிடக்கின்றன
எந்தப் பகலில் உறங்கினான்..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த இரவில் விழித்தான்..??
அனுமானிக்க  முடியாதபடி
அடங்கிப் போயிற்று நிகழ்காலம்

வேலைப் பழுக்களுக்கிடையில்
பசி வந்தால் சாப்பிட்டவனுக்கு
இப்போது வேலையே சாப்பிடுவதாகியதால்
பசியைச் சாப்பிடுகிறான்

கொரில்லாவைப்போல் தொடங்கியவனின்
மேய்ச்சல் பாய்ச்சல் எல்லாம்
தாவ முடியாமல் அறைக்குள் அடங்க
வௌவாலுக்கொப்பாகி
உயிர் பிச்சை வேண்டி கொரோனாத்
தவமாக இன்றின் வாழ்வு!

- ரோஷான் ஏ.ஜிப்ரி
(இறாகம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாவால்...

தொடுகையில் தொற்றி தொண்டைக்குள் தாவி
தொகுதிகள் தின்னும் தொலைதூரப் பாவி!
கொடூரக் கொலையாளி கொரோனா!

விஞ்ஞான விந்தையில் விளைந்த விந்தா?
வெளவாலின் வாழ்வின் வழி வந்த ஜந்தா?
மெய்ஞ்ஞானம் மெய்சிலிர்க்க மேதினி மொய்த்தாய்!
எந்நாளில் எங்கிருந்து எதிர்பாராமல் வந்தாய்?

உலகெலாம் உலாவி ஊரடக்கிய உயிரி
உயிருண்டு உளமாறும் ஊனுண்ணிக் கிருமி
நிலவுலாவியவன் நிர்க்கதியாய் நிற்கும் நேரம்
நீலவானும் நீள்கடலும் நிசப்தமான நொடி

தும்மிடத் தூரமாய் விலகிடும் உறவு
துறவறத் துன்பத்தில் துவமும் ஆறறிவு
விம்மியழும் வைத்தியம் வீதியிலும் வழிந்த பிணம்
வல்லரசின் வரலாற்றில் வலிகள் சூழ்ந்த கணம்

ஓசோன்படைத்துளை ஒடுக்கம் ஒருபுறம்
ஓலைக்குடிலில் எழும் ஓலம் மறுபுறம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்று மணமற்று மாறிய வளிமண்டலம்
மகிழ்ச்சியை மறந்தது மனித மன மண்டலம்

அசராத அணுவாயுதம் அடைந்தது அமைதி
அச்சத்தில் அமெரிக்கா ஆபத்தில் ஐரோப்பா
இரத்தத்தில் இத்தாலி இயமனிடம் இந்தியா
இடை நின்ற இயந்திரங்கள் இன்னும் பேரவலம்

வீதியெங்கும் வெறுமை வீட்டினிலே வறுமை
விலையேற்ற விளையாட்டு வீழ்ந்தது வியாபாரம்
சுத்தமாக சுற்றுச்சூழல் சுருண்டது சுதந்திரம்
சத்தமின்றிய சாவுகள் சரித்திர சோகங்கள்

விதி வழி வாழ்வு! வழியினி ஏது?
மதம் மறந்து மருத்துவர் மடி மேதினி!
மறுபடி மாறுமா? மாற்றுவார் யார்?இனி!

- விதுர்சனா ஸ்ரீரஞ்சன்
(முல்லைமகள்)
(திருநெல்வேலி,யாழ்ப்பாணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடுவில் கொஞ்சம் பக்கத்தை
## கொரோனாவின் பேனை நிரப்புகிறது

அகழ்வாரை தாங்கும் நிலம்
உழுது விடப்பட்டு இருந்தது
இகழ்வாரை தாங்கமுடியாமல்
அவள் என்னை விதைத்துச் சென்றாள்
வினை விதைத்தவர்கள் -இன்று
எனை அறுக்கிறார்கள்

நான்- கலியுக புத்தன்
கடவுளின் தூதுவன்
புதிய கீதைக்கு வந்த பரந்தாமன்
பூமியை வலம்வரும் சூரிய தேவன்

சாதி,மதம்,இனம் என பிரிந்தே இருந்தார்கள்
அருகில் இருந்தும் தொலைந்து போனார்கள்
சுயநலமாய் சிந்தித்தார்கள்
இயற்கையை வஞ்சித்தார்கள்
இன்று நியூட்டனின்
மூன்றாம் விதிக்குள்
சிக்கித்தவிக்கிறார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் முகக்கவசங்களை கழற்றி
பூமி அன்னையோ பெருமூச்சு விடுகிறாள்
புத்துணர்ச்சி பெறுகிறாள்
பழைமைக்கு திரும்புவதாக கற்பனை செய்து கொள்கிறாள்

என்னாலும் மனிதர்கள் சிலர் மரித்திருக்கக்கூடும்
ஆனால் மனிதம் என்னவோ உயிர்த்து நிற்கிறது
என்னை தோற்கடிப்பதற்காய்
சேர்ந்து கொண்டார்கள்
நான் வென்றுவிட்டேன்
முத்து எடுக்க மூழ்கத்தானே வேண்டும்

உங்கள் வாழ்க்கையின் சில பக்கங்களை
என் பேனா நிரப்பி இருக்கலாம்
தொடரும் பக்கங்களை உங்கள் கைகளே எழுதட்டும்
மீண்டும் சந்திப்போம் - தேவைப்பட்டால்
தேவனாக !

- ஸ்ரீஸ்கந்தராஜா ஷேயந்தன்
(வெள்ளவத்தை, கொழும்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா

ஆட்களற்று நகரம்
இயற்கையின்
இடைஞ்சல் அற்ற
வாழ்தலுக்காக தன்னை
தளர்த்திக் கொண்டது.

ஆனால்
மனித மார்க்கங்கள்
இந்த தவத்தில்
தோற்றுப்போய் விட்டன.
நாம் பண்டைய
வாழ்நிலையில்
இருந்து விடுபட்ட
போதும் மீண்டும்
அதே நிலைக்கு மாற்றி
வலுப்படுத்தி நின்றது
கொரோனாவின் ஆதிக்கம்,

வயிறு நிரப்ப
நேரமற்று மகிழ்வை

08 JUL 2020
277929



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைத்தவர்களின்
அன்புக்கான வழிகாட்டலின்
ஆசானாய் மனங்களில் நீக்கமற
இடம்பிடித்தது நின்றது
கொரோனா,

மரணங்களை தந்தாலும்
மறு பக்கத்தில் நாம்
இழந்ததை மீட்டு எடுக்கும்
வல்லமையையும் செலுத்தி
இந்த யுகத்தை
மனிதமனங்களுக்காக
மாற்றி அமைத்தது
துன்பத்துடன் இன்பத்தையும்
அனுபவி என்பதை காட்டி
நிற்கின்றது,

இயற்கையின் காத்திருப்பு
வீண்போகவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைச் சீர்படுத்தி விட்டது,

இதற்காக மனிதனின்
உயிர்கள் தான் பறிக்கப்பட்டன
இருப்பினும் இது ஒரு
காலச்சுழற்சியே....!
இசைவாக்கம் பெற்று
நிமிர்வதற்கு ஒரு அக்கினி பரீட்சை.

- தே.பிரியன்
(பண்ணங்கண்டி.கிளிநொச்சி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப்பக்கங்களில் சாட்சியமாய் கொரோனா

மௌனத்தின் கிடக்கையில் சமூகங்கள் ஸ்தம்பித்தன
மனித முயற்சிகளைத் தாண்டி இயற்கை ஆர்ப்பரித்தது
சமூக ஒருமைப்பாடு பரஸ்பரம் விலங்கிடப்பட்டது
அவற்றின் வெளிப்பாடுகளில் ஓர் சிறிய அணு பாரிய
உலக விழுமியங்களை ஆட் கொண்டது.
சமூக இடைவெளி பாரிய பிளவானதென்ன
கிளர்ந்தெழு முடியாமல் முடங்கியது கொரோனா
சமூக ஒருமை சார் தத்துவங்கள் தகர்ந்தன
யாவரும் சமதளத்தில் நிறுத்தப்பட்டனர்
அனைத்து சமூக இடையாடல்களையும் வெற்றி கொண்டது
தொழில் நுட்பம்.
கல்வியும் கைக்குள் அடங்கிற்று
மனித குலமே காட்சிப் பொருளாக
முடக்கப்பட்ட உறவு விரிசல்களுடன்
கொண்டாட்டங்கள் நடந்தேறின
வீதிகள் வெறுமையாகின
அச்சம் மூளைக்குள் குடியேறியது
காணாது சென்று நாட்கள் முடிந்தன.

- சப்னா இக்பால்
(பம்பைமடு, வவுனியா)

277929



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு துண்டு
## கொரோனாத் தணல் எரித்தது

நிம்மதியை ஏற்கெனவே
அச்சத்தீ எரித்துச் சாம்பலாக்கிவிட்டது.
பேருக்கு ஒன்றுமில்லாத வெறும் கூடு.

சந்தோசத்தை வறுமைத்தீ பொசுக்கியதால்
வீதிக்கு வரமுடியாத
கண்ணீர் வெள்ளம்
வாசல்களில் வற்றிக்கிடக்கிறது.

ஆலயங்களில் வாசல்கள் எரிகின்றன;
கால்வைக்க முடியாத அகோரம்
பூட்டிவைத்தபடி வணங்குவதற்கான அழைப்பு கேட்கிறது.

பள்ளிக்கூட வயல் முழுதும்
விதைக்க முடியாதபடி
பயிர்களெல்லாம் வீடுகளில் வாடிக்கிடக்கின்றன..
கொட்டிக்கிடக்கிறது நெருப்புத்தணல்..

வீதியெல்லாம் சூடேறிக் கொதிப்பதனால்
யாருமே கால்வைக்கவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையெல்லாம்
வெந்துகொண்டிருப்பதற்கும்
நாளை என்னாகுமோ என
உயிர் பொசுங்குவதற்கும்
விமானத்திலா வந்தாய்
கொரோனாத் தணல்துண்டே!

உலகையே எரிக்க உருவான அக்கினிக்குஞ்சா நீ.?
பாரதியில்லை இதைப்பாட.

தீத்தணலாய் நீ எரிப்பதுதானே
உலகம் கதறும் ஓயாத செய்தி.
எரிக்கிறாய் இரக்கத்தை உன்னிடமா எதிர்பார்ப்பது.

எல்லாம் போகட்டும்
இனவாதத் தீமூட்டியும்
எரித்துவிட்டுப்போகிறாய்
சாம்பலாகிக் கிடக்கிறது
சன்மார்க்க சமுகத்தின் ஆன்மாக்கள்.

- ஜமால்தீன் வஹாப்தீன்
(ஒலுவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவப்பு நட்சத்திரங்கள்

நாங்களும்
இப்போது வீட்டிற்குள்
வாழ்கிறோம்
விரல் இடுக்கில்
வீழும் மணலென
வருமானம் வடிந்திருந்தாலும்
முதலுக்கு மோசமில்லாமல்
வீடடங்கி இருக்கிறோம்

இப்போதெல்லாம் மறக்காமல்
கைகளையும் கழுவிக் கொள்கிறோம்
இடைவெளியை
இறுக்கமாய்க் கடைப்பிடிக்கிறோம்
கால்களில் படிந்த மண்ணென
காலத்தைத் தட்டி விடுகிறோம்
எப்போதும் போலவே
யாரும் அறியாமல் முகங்களை
மூடிக் கொள்கிறோம்
தொழிலின் தேசியப்பாடல்
தொடுகையின்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்ந்ததால்
தொலைந்தும் போகிறோம்

இப்போது தான்
வயிறு பசித்து உண்கிறோம்
மார்பை அளாவும்
பட்டக் கைகளின் உஷ்ணத்தோடு
உறங்கியும் போகிறோம்
பகலின் தனிமையை
முதுமையின் ஓவியங்களோடு
கடக்கும்
ஆலவிருட்சங்களின்
அவஸ்தைகள் உணர்கிறோம்
இராமபாணமாய் தைத்த
நகங்களின் கீறல்களை
தீயை கடந்த சீதையென
மறக்கிறோம்

காலம் திருப்பி தரும்
இராமபாதங்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் உயிர்தெழுவோம்
ஏனெனில் பசிக்கும் வயிறும்
பாலூட்டும் மார்பும்
வாதையில் கரையும்
தாயும் மின்மினிகளாய்
இல்லையென்றாலும்
விட்டில்களாயேனும்
வாழ வேண்டும்

- சிவனு மனோகரன்
(டிக்கோயா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் உறைந்த சட்டகம்

பழைய தெரு மாமியை கண்டேன்
எப்போதும் ஏதாவது பேசுவதற்காக
காத்துக் கொண்டிருப்பவள்
இன்றைக்கு சந்தையில் தலையை மட்டும் ஆட்டிவிட்டு
போயிவிட்டாள்
சிரித்தாளா? இல்லையா? என்று கூடப் புரியவில்லை
எதிர்வீட்டு டீச்சர் அக்கா
பகல் சாப்பாட்டுக்கு கொஞ்சம் கறி கூடக் கேட்பதில்லை
தொலைபேசியில் கதைக்கும் போது
அடிக்கடி வீட்டுக்கு கூப்பிடும் அத்தை கூட
திடீர்ரென்று இங்க வந்திராதீங்க
ஊர்ல கட்டுப்பாடு அதிகம் என்கிறாள்
வீட்டுக்கு வந்த விதானையாரும்
தேநீர் குடிக்க அச்சப்படுகிறார்
ஊருக்குள் வீண் வாக்குவாதங்கள் சண்டைகளும்
குறைவு தான்
சிலவேலை கஸ்டமாக இருந்தாலும்
இதுவும் ஒரு வகையில்...
வாய்களை கட்டிக் கொண்டு வாழ்வது
பிரச்சினை குறைவுதான்.

- எஸ்.திலகவதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாஒழிப்பு

நாட்டுக்குள் வந்தது நோயே - அந்த
நானில மாண்டிடு மாள்கொல்லிப் பேயே!.
வீட்டுக்குள் ளேயிருப் பாயே - வந்த
வீணான வைரசைக் கொன்றிடு வாயே!.

தொய்வொடு தும்மலுந் தானே - வரும்
தொண்டைக ரந்திட நுண்மியுந் தானே!.
காய்ச்சலி ருமலி னோடே - பெருங்
காயமே சோர்ந்திடுங் கண்டிடு வாயே!.

மூக்கொடு வாயினை நீயே - நன்கு
மூடியே கட்டினால் நோய்நெருங் காதே!.
மாக்களை யண்டிநின் றாலே - பின்பு
மாயமாய் வந்திடும் பொல்லாத நோயே!.

வதந்தி யைநீபரப் பாதே - வீண்
வம்புகள் செய்துநீ கம்பியெண் ணாதே!.
சுதந்தி ரங்கொண்டோ டாதே - பின்
சுற்றத்தை விட்டுநீ சென்றிடு வாயே!.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

சகியுட னூர்சுற்றி டாதே - தேயுஞ்
சகனு டனெங்க ணுஞ்சென்று விடாதே!
மகிழ்வு டனேயிருப் பாயே - நீயும்
மற்றோர்க ளின்புறச் செய்திடு வாயே!.

- மயிலையூர் மோகன்
(காங்கேசன்துறை)

137767 CC
பொதுசன நூலகம்
08 JUL 2020
யாழ்ப்பாணம்
277929



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜமீல், மீரா சிவகாமி,
சு.க.சிந்துதாசன், கரு.மாணிக்கம்,
தே.பிரியன், தெட்சணாமூர்த்தி கரிதரன்,
ஜமால்தீன் வகாப்தீன், சு.ராஜசெல்வி,
விதுர்சனா ஸ்ரீரஞ்சன், ராணி சீதரன்,
சப்னா இக்பால், ஹ.பிரசாந்தன்,
ரோஷான் ஏ. ஜிப்ரி, எஸ்.திலகவதி,
வெ.அருட்குமரன், மயிலையூர் மோகன்,
ஸ்ரீஸ்கந்தராஜா ஷேயந்தன், சிவனு மனோகரன்

கொரோனா வைரஸ் தொற்று (கோவிட் 19) சைனாவில் ஆரம்பித்து மீவிசையுடன் உலகெங்கும் பரவி இலட்சக் கணக்கான மனித உயிர்களைக் காவு கொண்டுவருகிறது. உலக பலம் மிக்க நாடுகள்கூட இந்த நுண்ணுயிரியின் தாக்கத்துக்கு ஈடுகொடுக்க முடியாது திணறு கின்றன. நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கையில் கொள்ளை, கோதாரி நோய்கள் பாரிய உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியதாக அறியமுடிகின்றது. ஆனாலும் அவை பற்றி எழுத்துப் பதிவுகளைப் பெற்றுக் கொள்வது கடினதாக உள்ளது. அதுபோலல்லாது தற்போதைய கொரோனா ஏற்படுத்திய தாக்கத்தை எதிர்கால சந்ததி இலகுவாக அறிந்துகொள்ள வேண்டும், அதையும் நயமிக்க இலக்கிய வடிவமொன்றினூடாக அறிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு ஜீவநதி சஞ்சிகை கவிதைப்போட்டி ஒன்றை நடத்தி தெரிவுசெய்யப்பட்ட சிறந்த கவிதைகளை "கொரோனாக் கவிதைகள்" என்ற தொகுதியாக வெளியிடுகின்றமை சிறப்பிற்குரிய வரலாற்றுப் பணியுமாகும்.

- அ.பௌநந்தி

ISBN 978-955-0958-46-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org